8. அரசினர் தனித் தீர்மானம்

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயர்வதற்குக் காரணமான மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பாராட்டு தெரிவித்தல் மற்றும் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கு மத்திய அரசின்மூலம் கேரள அரசுக்கு அறிவுரை வழங்க வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 21-11-2014 ஆம் நாள், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்ட மக்கள், ஏன் தமிழக மக்கள் அனைவருமே உய்த்து உணரும் தெவிட்டாத இன்பம் பயக்கும் நன்னாள் ஆகும். ஏனெனில், அன்று அதிகாலை 2 மணிக்கு 37 ஆண்டுகளுக்குப் பிறகு முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பூபாள ராகத்தில் நம் இதயத்தை நிறைத்த அந்த நன்னாள் தமிழக வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட்ட பொன் நாள். தமிழக விவசாயிகளின் உரிமை நிலைநாட்டப்பட்ட வெற்றித் திருநாள். சீரிய சிந்தனைத் திறனால், முன்னேற்றப் பாதையின் வழிகாட்டி, தமிழகத்தை வழி நடத்தும் மக்களின் முதல்வர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் மக்கள் தம்மீது வைத்த நம்பிக்கையை ஈடேற்றி, இடைவிடாத சட்டப் போராட்டம் நடத்தி, சரித்திரம் படைத்த வெற்றிப் பயனை எடுத்துக்காட்டிய நன்னாள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுக்கவும், தமிழ்நாட்டின் உரிமைகளைக் கட்டிக் காக்கவும் வல்லமையுள்ள ஒரே மக்கள் தலைவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை உறுதிப்படுத்திய திருநாள். வைகைக் கரையோ, இல்லை வங்கக் கடலோ என வியக்கும்படி முல்லைப் பெரியாறு பாசன விவசாயிகள் ஒன்றுகூடி 22-8-2014 அன்று மதுரையில் நடத்திய பாராட்டு விழாவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுதியிட்டுக் கூறியபடி அணையின் முழு

2014 டிசம்பர் 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நீர்த்தேக்க மட்டமான 152 அடியும் எட்டிவிடக்கூடிய தூரத்தில்தான் உள்ளது எனக் காட்டிய நம்பிக்கைத் திருநாள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவாங்கூர் மகாராஜாவுக்கும், சென்னை மாகாண அரசுக்கும் இடையே 29-10-1886-ல் பெரியாறு திட்ட ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தம், 1-1-1886 முதல் 999 ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். இதன்மூலம் பெரியாறு திட்டத்திற்காக ஏக்கருக்கு ஆண்டொன்றுக்கு 5 ரூபாய் வீதம் சுமார் 8,000 ஏக்கர் குத்தகைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 2-15

முல்லைப் பெரியாறு அணை, கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் பெருமுயற்சியால், 1895 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இத்திட்டத்தினால், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் சுமார் 2.23 இலட்சம் ஏக்கர் நிலம் பயன்பெறுகிறது. ஆண்டொன்றுக்கு சராசரியாக 22 டி.எம்.சி. அடி நீர் பெரியாற்றிலிருந்து திருப்பி விடப்பட்டு தமிழ்நாட்டில் விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவைக்குப் பயன்படுத்தப்படுகிறது.

29-5-1970 அன்று தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளுக்கிடையே இரண்டு துணை ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

1979 ஆம் ஆண்டு பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்து, மலையாள நாளேடுகள் அச்சங்களை எழுப்பின. அதனடிப்படையில், மத்திய நீர்வளக் குழுமத்தின் தலைவர் 23-11-1979 அன்று அணையினை ஆய்வு செய்தார். 25-11-1979 அன்று திருவனந்தபுரத்தில் மத்திய நீர்வளக் குழுமத்தின் தலைவர், இரு மாநில அதிகாரிகள் மற்றும் பொறியாளர்களுடன் மேற்கொண்ட கூட்டத்தில் முல்லைப் பெரியாறு அணையை நவீன தரத்திற்குக் கொண்டுவர தமிழக அரசுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, அவசர நடவடிக்கை, இடைக்கால நடவடிக்கை மற்றும் நீண்டகால நடவடிக்கை என அணையைப் பலப்படுத்தும் பணிகள் பரிந்துரைக்கப்பட்டன. அவசர நடவடிக்கைப் பணிகள் மற்றும் இடைக்கால நடவடிக்கைப் பணிகளை செய்து முடிக்கும்பொருட்டு, அணையின் நீர்மட்டம் அதன் முழு நீர்மட்ட அளவான

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 4

152 அடியிலிருந்து தற்காலிகமாக 136 அடியாக குறைக்கப்பட்டது. அவசர மற்றும் இடைக்கால பலப்படுத்தும் பணிகள் செய்து முடிக்கப்பட்ட பின்னர், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 145 அடிக்கு உயர்த்தலாம் என மத்திய நீர்வளக் குழுமம் 29-4-1980 அன்று பரிந்துரைத்தது.

1980 முதல் 1994 வரை முல்லைப் பெரியாறு அணையினை வலுப்படுத்தும் பணிகள் செயல்படுத்தப்பட்டன. அணையின் முன் மற்றும் பின் பக்கப் பகுதிகள் சுண்ணாம்பு சுர்க்கி கலவையால் கருங்கற்கள் கொண்டு கட்டப்பட்டுள்ளன. அணையின் மையப் பகுதி சுண்ணாம்பு சுர்க்கி திண் கற்காரையால் (Lime Surki Concrete) நிரப்பப்பட்டது.

குறுகிய கால திட்டமாக, அணையின் எடையை அதிகரிக்கும் பொருட்டு, 21 அடி அகலத்திற்கு, 3 அடி பருமன் கொண்ட, RCC கட்டுமானப் பணி, அணையின் முழு நீளத்திற்கு அதன்மேல் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக, அணையின் எடை 1 மீட்டருக்கு 35 டன் அதிகரித்துள்ளது. அதாவது, அதன் கட்டமைப்புடன் மொத்தம் 12,000 டன் எடை கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

நடுத்தர கால நடவடிக்கையாக, இறுக்கு விசை தொழில்நுட்பத்தின் அடிப்படையில், எஃகு கம்பிகளால், அணையின் அடித்தளத்துடன் இழுத்துக் கட்டப்பட்டுள்ளது. அணையின் முன் பகுதியிலிருந்து 5 அடி தொலைவில், அணையின் நீர்ப்பரப்பிலிருந்து பூமிக்குள் 30 அடி வரை, கட்டமைப்பு முழுவதும் 9 அடி இடைவெளியில், 4 அங்குலம் குறுக்களவில் துளைகள் போடப்பட்டு, இந்தத் துளைகளுக்குள் 7 மில்லி மீட்டர் பருமன் கொண்ட மிக வலுவான 34 எஃகு கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன. அஸ்திவாரத்திலுள்ள கருங்கல் பாறைகளுடன் இந்தக் கம்பிகள் உறுதியாக பொருத்தப்பட்டுள்ளன. முதலில் 20 அடி ஆழத்திற்கு திண் கற்காரை கட்டுகள் போடப்பட்ட பிறகு, கம்பிகள் செலுத்தப்பட்டு, நிறுத்தப்பட்டன. மேற்பரப்பிலிருந்து 120 டன் சக்தி கொண்டு இக்கம்பிகள் இழுத்துக் கட்டப்பட்டுள்ளன. இந்த நிலையில் துளையை அடைக்கும் வகையில், சிமெண்ட் கலவை போடப்பட்டு, மேற்பரப்பு மூடப்பட்டது. இதன்காரணமாக, அஸ்திவார பாறைகளுடன் 120 டன் விசை கொண்டு அணையை வலுவாக இறுக்கு கம்பிகள்

2014 டிசம்பர் 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பிடித்துக்கொள்ளும். நில அதிர்வு உட்பட பல்வேறு விசைகளைத் தாங்கிக்கொள்ளும் வகையில் அணையின் முழு நீளத்திற்கு 9 அடி இடைவெளியில் 9.5 கம்பித் தொகுப்புகள் (Group of Rods) செலுத்தப்பட்டு, சிமெண்ட் கலவை போடப்பட்டிருக்கிறது.

நீண்டகால நடவடிக்கையாக, அணையின் பின்புறத்தில் 10 அடி ஆழம், 32 அடி அகலத்திற்கு தரை மட்டத்திலிருந்து 145 அடி உயரத்திற்கு, RCC கட்டுமானம் அணையின் தரைப் பகுதியுடன் இணையும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, தற்போதுள்ள அணை மற்றும் புதிய கட்டுமானம் ஆகியவை ஒரே அணைபோல் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 2-20

மத்திய நீர்வளக் குழுமத்தின் பரிந்துரையின்படி, கட்டுமானத்தை வலுப்படுத்தும் அதே சமயத்தில், புதிய கட்டுமானத்தில் 10 அடி மற்றும் 45 அடி உயரத்திற்கு இரண்டு வடிகால் மாடங்கள் (Drainage Galleries) அமைக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் அணையிலிருந்து கசியும் நீர் அன்றாடம் கணக்கிடப்படுகிறது. மேலும், அணையின் நீர்மட்டம் அதன் முழுக் கொள்ளளவான 152 அடிக்கும் மேலாக உயர்கையில், ஏற்கெனவே உள்ள 36x16 அடி கொண்ட 10 மதகுகள் வழியாக உபரி நீர் வெளியேற்றப்படும். இதன்மூலம் ஒரு வினாடிக்கு 86,000 கன அடி நீரை வெளியேற்ற முடியும்.

இதுமட்டுமல்லாமல், மத்திய நீர்வளக் குழுமத்தின் ஆலோசனையின்பேரில், கூடுதலாக வினாடிக்கு 36,000 கன அடி நீரை வெளியேற்றும் திறன் கொண்ட 40x16 அடி அளவுள்ள 3 மதகுகள் கட்டப்பட்டுள்ளன. எனவே, மொத்தமாக, தற்போது அணையிலிருந்து வினாடிக்கு 1,22,000 கன அடி உபரி நீரை வெளியேற்ற இயலும்.

முல்லைப் பெரியாறு அணை இவ்வாறாக பலப்படுத்திய பின்னரும், கேரள அரசு அணையின் நீர்மட்டம் 136 அடியிலிருந்து உயர்த்தப்படுவதை ஏற்றுக்கொள்ளாமல், அணையின் நீர்மட்டம் 136 அடியிலேயே இருக்கவேண்டும் என வலியுறுத்தியது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 4

கேரள உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் ஆகியவற்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்படவேண்டும் என்ற மனுக்களின் அடிப்படையில், அவற்றை உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றி உத்தரவிடப்பட்டது. உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையின்படி நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பயனளிக்காத நிலையில், உச்ச நீதிமன்றம் இவற்றை விசாரித்து, அதன்மீது 27-2-2006 அன்று தனது தீர்ப்பினை அளித்தது. அந்தத் தீர்ப்பில், தமிழ்நாடு அரசு, தற்காலிகமாகக் குறைத்து வைக்கப்பட்ட அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடிக்கு உயர்த்திக் கொள்ளலாம் எனவும், மத்திய நீர்வளக் குழுமத்தின் பரிந்துரையின்படி, பேபி அணை (Baby Dam) மற்றும் மண் அணையினை (Earth Dam) பலப்படுத்தும் பணியினை மேற்கொள்ளலாம் எனவும், தமிழ்நாடு இப்பணிகளை மேற்கொள்வதை கேரள அரசும் அதன் அலுவலர்களும் தடுத்து நிறுத்தாமல் இருக்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தது. மத்திய நீர்வளக் குழுமத்தின் பரிந்துரையின்படி, அணையைப் பலப்படுத்திய பின் வல்லுநர் குழு அணையின் பாதுகாப்பை ஆய்வு செய்த பின், அணையின் முழு நீர்மட்டமான (FRL) 152 அடி வரையில் உயர்த்தலாம் என்றும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பைச் செல்லாததாக ஆக்கும் வகையில், அவமதிக்கும் வகையில் கேரள அரசு 18-3-2006-ல் கேரள நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளப் பாதுகாப்புச் சட்டம், 2003-ல் சில திருத்தங்களைச் செய்து, "கேரள நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம், 2006" என்ற சட்டத்தினை இயற்றியது. இந்த திருத்திய சட்டத்தில், முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர்மட்ட அளவு 136 அடி (FRL 136 feet) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத் திருத்தம் முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தவரை அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது; எனவே இது செல்லத்தக்கதல்ல என உத்தரவிடக் கோரி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, உச்ச நீதிமன்றத்தில் 31-3-2006 அன்று சிவில் வழக்கு (O.S.No.3 of 2006) ஒன்றைத் தாக்கல் செய்தது.

உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய சிறப்பு அமர்வு, இந்த வழக்கில் சில அரசமைப்புச் சட்டப் பிரிவுக்

2014 டிசம்பர் 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கூறுகள்மீது விளக்கங்கள் தேவைப்படுவதால், 5 நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சாசன அமர்வு முன் இவ்வழக்கு விசாரிக்கப்படவேண்டும் எனக் கருதியது. பின்னர் அமைக்கப்பட்ட 5 நீதிபதிகள் அடங்கிய அரசமைப்பு சட்ட அமர்வு, 18-2-2010 அன்று ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டாக்டர் ஏ.எஸ். ஆனந்த் அவர்களை தலைவராகக் கொண்டு 5 உறுப்பினர்கள் கொண்ட ஓர் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவினை (Empowered Committee) ஏற்படுத்த உத்தரவிட்டது.

இந்த அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின்கீழ் அணையின் வலுத்தன்மையைச் சோதிக்க களச் சோதனைகள் மற்றும் சோதனைக் கூடங்களில் செய்யக்கூடிய சோதனைகள் மற்றும் ஆய்வுகள், மத்திய நீர்வளக் குழுமம் (CWC), மத்திய மண் மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம் (CSMRS), மத்திய நீர் மற்றும் சக்தி ஆராய்ச்சி நிலையம் (CWPRS) மற்றும் சில நிறுவனங்கள்மூலம் செய்ய அவற்றை ஒருங்கிணைத்து நடத்த ஒரு குழுவை (Committee to Co-ordinate) அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் உறுப்பினரான டாக்டர் சிடி. தட்டே அவர்களின் தலைமையில் நியமித்தது. இந்த ஒருங்கிணைப்புக் குழு பல ஆய்வு மற்றும் சோதனைகளைச் செய்து முடித்தது.

இந்த அதிகாரம் அளிக்கப்பட்ட குழு முன்பும், உச்ச நீதிமன்றத்தின் முன்பும், தமிழகத்தின் சார்பில் எடுத்து வைக்கப்பட வேண்டிய வாதங்கள் குறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவ்வப்போது தேவையான கூட்டங்களை நடத்தி, அறிவுரைகளை வழங்கி வந்தார்கள்.

உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவில், தமிழக அரசின் சார்பில் நியாயமான, வலுவான, திறமையான வாதங்கள் வைக்கப்பட்டன. தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளின் சார்பில் வைக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையிலும், ஆய்வுகளின் அடிப்படையிலும், அதிகாரம் அளிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை 25-4-2012 அன்று உச்ச நீதிமன்றத்திற்கு அளித்தது.

அதன்பின்னர், உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின்போது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளின்படி, தமிழக அரசின் சார்பில் வாதங்கள்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 4 எடுத்துரைக்கப்பட்டன. கேரள அரசின் திருத்தச் சட்டம் அரசியல் சாசன அமைப்பிற்கு முரணானது என்றும்; ஏற்கெனவே 2006-ல் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவான முதற்கட்டமாக அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்திக்கொள்ளலாம் என்றும், பின்னர் அணையின் நீர்மட்டத்தை 152 அடி வரை உயர்த்திக்கொள்ளலாம் என்ற உத்தரவும் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிடப்பட்டன.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான 5 நீதியரசர்களைக் கொண்ட அரசியல் சாசன அமர்வு, 7-5-2014 அன்று, தனது தீர்ப்பினை வழங்கியது. இந்தத் தீர்ப்பில், தமிழ்நாடு தாக்கல் செய்த சிவில் வழக்கு தீர்ப்பாணை அதாவது "decree" ஆக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 2-25

கேரள அரசின், கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம், 2006, அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று உத்தரவிடப்பட்டுள்ளதோடு, பிப்ரவரி 2006 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரையில் உயர்த்திக்கொள்ளலாம் என்ற தீர்ப்பிற்கு கேரள அரசு குறுக்கீடு ஏதும் செய்யக்கூடாது என்றும்; அந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டவாறு, தமிழ்நாடு அரசு, பராமரிப்புப் பணி மற்றும் வலுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளலாம் என்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டது. மேலும், கேரள அரசின் அச்சங்களில் உண்மை ஏதுமில்லை என்றாலும், மத்திய நீர்வளக் குழுமம், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களின் சார்பில் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழு அணையின் நீர்மட்டத்தை 142 அடி அளவுக்கு உயர்த்தப்படுவதை மேற்பார்வையிட வேண்டும் என்றும் அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினை நடைமுறைப்படுத்தும்வகையில், மூவர் குழுவை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி, மாண்புமிகு பாரதப் பிரதமரை 3-6-2014 அன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேரில் சென்று, டெல்லியில் சந்தித்து கோரிக்கை மனுவினை அளித்ததோடு, அதில் உள்ள அம்சங்களை மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு விரிவாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறினார்கள். அந்தக் கோரிக்கையில் இருந்த நியாயத்தைப்

2014 டிசம்பர் 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

புரிந்துகொண்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் ஆவன செய்வதாக உறுதி அளித்தார்கள். அதன்படி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கேற்ப, மேற்பார்வைக் குழு அமைப்பதற்கான ஆணையை 1-7-2014 அன்று மத்திய அரசு வெளியிட்டது.

இந்த ஆணை கிடைக்கப்பெற்றவுடன், மேற்பார்வைக் குழுக் கூட்டம் உடனடியாக கூட்டப்பட வேண்டுமென்று மேற்பார்வைக் குழுவின் தலைவரை தமிழக அரசு கேட்டுக்கொண்டது. அதனடிப்படையில், இந்தக் குழுவின் முதல் கூட்டம் 8-7-2014 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலேயே முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்குரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று தமிழகத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. மேற்பார்வைக் குழுவின் இரண்டாவது கூட்டம் 17-7-2014 அன்று நடைபெற்றபோது இந்தக் கூட்டத்தில் உச்ச நீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றும்வகையில் அணையின் நீர்மட்டத்தை 142 அடிவரை உயர்த்துவதற்கு முடிவு செய்யப்பட்டு, அவ்வாறு 142 அடி வரை நீரை தேக்கி வைப்பதற்கு ஏதுவாக அடைப்பான்கள், அதாவது shutters 17-7-2014 அன்றே இறக்கப்பட்டன.

புரட்சித் தலைவி அம்மா அவர்களும், தமிழக அரசும் எடுத்த தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் முதல்கட்டமாக முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி வரை நீர் 21-11-2014 அன்று தேக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

முல்லைப் பெரியாறு அணை உறுதியானதுதான் என உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழு அளித்த அறிக்கையின்பேரில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னரும், கேரள அரசு இன்னமும் பிடிவாதமாக முல்லைப் பெரியாறு அணை வலுவானதல்ல என்று கூறி வருவதை எவராலும் ஏற்க இயலாது. எனவே, முல்லைப் பெரியாறு அணையின் வலுவினையும், தமிழகம் தனக்குரிய நியாயமான தண்ணீரைப் பெற்றிடவேண்டும் என்பதையும் கருத்தில்கொண்டு, கேரள அரசு தனது ஒத்துழைப்பை இதற்கு வழங்கவேண்டும். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்கு ஏற்ப, பேபி அணையில் மேற்கொள்ளப்பட வேண்டிய எஞ்சிய பணிகளை முடிப்பதற்கும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 4 அதன்பின்னர் முல்லைப் பெரியாறு அணையில் 152 அடி வரை நீர் தேக்கப்படுவதற்கு கேரள அரசு முழு ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் இந்த மாமன்றத்தில் ஒருமனதாக பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம்

"தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள சுமார் 2.23 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற வழிவகுக்கும் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் மத்திய நீர்வளக் குழுமத் தலைவரின் பரிந்துரைகளின் அடிப்படையில், தற்காலிகமாக 136 அடியாக குறைக்கப்பட்டு, முல்லைப் பெரியாறு அணை வலுப்படுத்தப்பட்டது. முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை தொடர்பாக நிலுவையில் இருந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், தமிழ்நாடு மற்றும் கேரள மாநில அரசுகள் எடுத்துரைத்த வாதங்களின் அடிப்படையிலும், வல்லுநர்கள் அளித்த அறிக்கைகளின் அடிப்படையிலும், முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தினை 136 அடியிலிருந்து 142 அடி வரை முதற்கட்டமாக உயர்த்திக்கொள்ளலாம் என்றும், அணையை வலுப்படுத்துவதற்கான எஞ்சிய பணிகளை தமிழ்நாடு மேற்கொள்ளலாம் என்றும் மத்திய நீர்வளக் குழுமம் திருப்தி அடையும்வகையில் அணையைப் பலப்படுத்துவதற்கான எஞ்சிய பணிகள் முடிவடைந்த பிறகு, வல்லுநர்கள் அணையினை ஆய்வு செய்தபின், அணையின் முழு நீர்மட்ட அளவான 152 அடி அளவுக்கு உயர்த்திக்கொள்ளலாம் என்றும் 27-2-2006 அன்று தீர்ப்பளித்தது.

பிற்பகல் 2-30

உச்ச நீதிமன்றத்தின் இந்த ஆணையை முடக்கும் வகையில் "கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் 2006", கேரள சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, இந்த திருத்தச் சட்டம் 18-3-2006 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி, முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர்மட்டம் 136 அடியாக நிர்ணயிக்கப்பட்டது. இந்த திருத்தச் சட்டம் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்பதால், தமிழக அரசால் சிவில் வழக்கு ஒன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

2014 டிசம்பர் 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

உச்ச நீதிமன்ற தலைமை நீதியரசர் தலைமையிலான 5 நீதியரசர்கள் கொண்ட அரசமைப்பு அமர்வு 7-5-2014 அன்று தனது தீர்ப்பினை வழங்கியது. இந்தத் தீர்ப்பில் தமிழ்நாடு அரசால் தாக்கல் செய்யப்பட்ட சிவில் வழக்கு, தீர்ப்பாணை அதாவது, "decree" ஆக்கப்பட்டது. கேரள அரசின், கேரள பாசன மற்றும் நீர்ப்பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் 2006, முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தவரை, அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்றும் உத்தரவிட்டது. மேலும், மத்திய நீர்வளக் குழுமம், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களின் சார்பில் நியமிக்கப்படும் 3 உறுப்பினர்கள் கொண்ட குழு அணையின் நீர்மட்டத்தை 142 அடி என்ற அளவிற்கு உயர்த்தப்படுவதை மேற்பார்வையிடவேண்டும் என்றும் இந்தத் தீர்ப்பில் கூறப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வலியுறுத்தலின்பேரில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஏற்ப, மேற்பார்வைக் குழு அமைப்பதற்கான ஆணையை 1-7-2014 அன்று மத்திய அரசு வெளியிட்டது. 17-7-2014 அன்று நடைபெற்ற இந்த மேற்பார்வைக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில், அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்துவதற்கு முடிவு செய்யப்பட்டு, அதற்கு ஏதுவாக, அடைப்பான்கள் இறக்கப்பட்டன.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியை 21-11-2014 அன்று அதிகாலை 2 மணிக்கு எட்டியது. முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி வரை நீர் தேக்கப்பட்டது, தமிழக மக்கள் அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு காரணமான மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசுக்கும் இந்த மாமன்றம் தனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்கு ஏற்ப, பேபி அணையை வலுப்படுத்தவும், எஞ்சிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கும், கேரள அரசு ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனவும், மத்திய அரசு, கேரள அரசுக்கு இது தொடர்பாக தகுந்த அறிவுரைகளை வழங்க வேண்டும் எனவும் இந்த மாமன்றம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது." (மேசையைத் தட்டும் ஒலி)

[2014 டிசம்பர் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு 2011, டிசம்பர் திங்களில் நிகழ்ந்த குளிர்கால கூட்டத் தொடரில் போற்றுதலுக்குரிய மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓர் அரசினர் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தின் தொடர்ச்சியாக இன்றைக்கு உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பரிந்துரையின்படியும், நம்முடைய தார்மீக உரிமைகளின்படியும் அந்த நீர்த்தேக்க அளவினை 142 அடியிலிருந்து 152 அடியாக உயர்த்திடவேண்டும், இதற்கு மத்திய அரசு உடனடியாக தலையிட்டு விரைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தி மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிய விரும்புகின்றேன். வழிமொழிந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 2-35

இந்த உரிமைகளைப் பொறுத்தவரையில் 128 ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டிஷ் முடியாட்சி இந்தியாவிலே இருந்தபோது திருவாங்கூர் சமஸ்தானத்திற்கும் நம்முடைய சென்னை ராஜதானிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக இந்த உரிமைகளை நாம் பெற்றிருக்கின்றோம். சுதந்திர இந்தியாவிற்கு முன்பு பிரிட்டிஷ் இந்தியாவிலே இந்த உரிமைகளை நாம் பெற்றோம். ஆனால் பிரிட்டிஷ் இந்தியாவிலே பெற்ற அந்த உரிமைகளை இந்த சுதந்திர இந்தியாவிலே நாம் முழுமையாக அடைந்திருக்கின்றோமா, தக்க வைத்திருக்கிறோமா என்றால் ஒவ்வொரு தமிழனும் வேதனைப்பட வேண்டியதாக இருக்கின்றது.

67 ஆண்டு கால சுதந்திரத்திலே, சற்றேறக்குறைய 39 ஆண்டு காலம் இந்த உரிமைகளுக்காக ஒரு தொடர் போராட்டம் நடந்திருக்கிறது. இந்தத் தொடர் போராட்டத்திலே 1886 ஆம் ஆண்டிலே அன்றைய ஒப்பந்தம் விளைந்தபோது, அன்றைக்கு ஒரு பொறியாளர், வெள்ளைக்கார கர்னல் பென்னிகுயிக் தன்னுடைய மனைவியின் சொத்துக்களை விற்று ஒரு அணையைக் கட்டினார். 9 ஆண்டு காலம் எடுத்துக்கொண்டு அந்த அணையை அவர் உருவாக்கினார். பென்னிகுயிக் உருவாக்கிய அந்த அணையை, பல ஆண்டுகளுக்குப் பிறகு பாதுகாத்து

2014 டிசம்பர் 4] [முனைவர் செ.கு. தமிழரசன்]

தமிழர்களுக்குத் தந்திருக்கிற பெருமை, வாழும் பெண்ணிகுயிக்காக இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) நம்மிடையே இருந்து கொண்டிருக்கின்ற போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனென்றால் இது ஒரு நாளைய போராட்டம் அல்ல. 1970 ஆம் ஆண்டிலே, போடப்பட்ட துணை ஒப்பந்தத்திற்கு 1986-லே மீண்டும் ஒரு துணை ஒப்பந்தம் போடப்பட்டது. 1970 ஆம் ஆண்டிலே ஒரு துணை ஒப்பந்தம் போடப்பட்டதே அப்போது தமிழகத்திலேயும் ஓர் ஆட்சி இருந்தது. 1970 ஆம் ஆண்டிலே போட்ட துணை ஒப்பந்தத்திற்குப் பிறகுதான் பல்வேறு விளைவுகளை கேரளமும், தமிழகமும் சந்திக்க வேண்டிய நிலைமைகள் உருவானது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இன்றைக்கு கிடைத்திருக்கிறது என்றால், அது ஒரு சாதாரண, எளிதிலே கிடைத்துவிட்ட தீர்ப்பு என்று யாரும் சொல்லிவிட முடியாது. போற்றுதலுக்குரிய மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மிகக் கடுமையான, விட்டுத் தராத, சமரசம் இல்லாத, (மேசையைத் தட்டும் ஒலி) எதைப் பற்றியும் அஞ்சாத, கவலை கொள்ளாத, துணிந்து நின்ற தொடர் போராட்டம், அந்தத் தொடர் போராட்டம், அந்த நிருவாகத் திறன், அவர்களுடைய அணுகுமுறை இவற்றால்தான் 136 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், இன்றைக்கு 142 அடியாக உயர்ந்து, 37 ஆண்டுகளுக்குப் பிறகு எட்டிப் பிடித்திருக்கிற அந்தச் சிறப்பை, அந்த வெற்றியை நாம் காண முடிந்திருக்கிறது. இந்த 142 அடியோடு நின்றுவிடாமல், 152 அடியும், அந்த உரிமையும் நமக்கு கிடைத்தாக வேண்டுமென்பதற்காகத்தான் போற்றுதலுக்குரிய மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற இந்த அரசு, இந்த அரசினர் தீர்மானத்தை, 3 ஆண்டுகளுக்கு முன்னாலே போடப்பட்ட அந்தத் தீர்மானத்தின் தொடர்ச்சியாக இன்றைக்கு இந்த அவையிலே கொண்டு வந்திருக்கிறது என்கின்றபோது தமிழக மக்களின் சார்பிலே நான் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிரிட்டிஷ் இந்தியாவிலே மகாகவி பாரதி தமிழகத்தின் வளமான நதிகளைப் பற்றி சொன்னபோது

"காவேரி, தென்பெண்ணை, பாலாறு—தமிழ்
கண்டதோர் வைகை பொருனை நதி"
என்று சொன்னார். ஒட்டுமொத்தமாக தமிழகத்தின் வளமான

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2014 டிசம்பர் 4

நதிகளையெல்லாம், இந்த நதிகளின் சிறப்புகளையெல்லாம் சுருக்கமாக ஓரிரண்டு வரிகளிலே பாரதி சொன்னார். இந்த நதிகளிலே இதிலே எதுவாவது இப்போது நம் மக்களுக்கு முழுமையாகப் பயன்படுகின்ற வகையிலே, அப்படிப் பயன்படுத்தக்கூடிய மிகையான சக்தியோடு பரிணமித்திருக்கிறதா என்றால், இல்லை. அதற்குக் காரணம், அடிப்படையிலே சுதந்திர இந்தியாவிலே நதிகளைத் தேசியமயமாக்க வேண்டும். தேசியமயமாக்க கங்கையிலிருந்து காவேரி வரையிலே இணைப்பு வேண்டும். வெள்ளம் பெருக்கெடுத்து ஓடக் கூடாது; அதேநேரத்திலே வறட்சியும் வந்துவிடக் கூடாது. ஆக, வெள்ளமும் தடுத்திடப்பட வேண்டும், வறட்சியும் போக்கிடப்படவேண்டும். வட இந்தியாவிலே ஓடிய கங்கையிலிருந்து தென் இந்தியாவிலே இருக்கிற காவேரி வரையிலே இணைத்தாகவேண்டும், நதிகளை தேசியமயமாக்கவேண்டுமென்று அன்றைக்கு பல அறிஞர்கள் விரும்பினார்கள். இந்த நதிநீர் ஆணையமே ஒரு சுதந்திரம் பெற்ற ஆணையமாக இருக்கவேண்டுமென்று கருதினார்கள். ஆனால், இன்றைக்கு ஒவ்வொன்றுக்கும் காவேரியா, கர்நாடகத்தோடு பிரச்சினை. பாலாறா, ஆந்திராவோடு பிரச்சினை. 60 ஆண்டுகளுக்கும் மேலே அந்தப் பாலாற்றில் வெள்ளத்தை நானும் பார்த்ததில்லை, இந்த மன்றத்திலே பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த பாலாற்றுப் படுகையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களும் பார்த்திருக்கமாட்டார். ஆக, அந்தப் பாலாற்றின் படுகையிலே இருந்துகொண்டிருக்கின்ற நாங்கள், பாலாற்றிலே ஒரு வெள்ளத்தைப் பார்த்ததே இல்லை. பாலாறு என்பது வெறும் பெயரளவிலே இருக்கின்ற ஆறாக இருந்து கொண்டிருக்கிறது.

இந்த அணையிலே 142 அடி தண்ணீர் தேங்க முடியாது, அதற்கு வாய்ப்பு இல்லை, அப்படி வந்தால் அது உடைபடும், உடைபட்டால் கேரளத்திலே பல இலட்சம் மக்கள் பாதிப்புக்குள்ளாவார்கள். இதிலே 142 அடிக்கு தண்ணீரே தேங்காது. ஏனென்றால் அங்கேயிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பலரால் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கு வாய்ப்பே இல்லை. மதகுகள் எல்லாம் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்டவை; அவை சீரழிந்து கிடக்கின்றன' என்றெல்லாம் அடுக்கடுக்காக எவ்வளவோ விஷமப் பிரச்சாரங்களை எதிரிகள் செய்தபோதும், அவை ஒவ்வொன்றையும் முறியடித்து, இப்படி எதிரிகள் செய்கிற எந்த விஷமப் பிரச்சாரமும்

2014 டிசம்பர் 4] [முனைவர் செ.கு. தமிழரசன்]

உண்மையில்லை, உண்மையில்லை என்று இன்றைக்கு நாட்டுக்கு எடுத்துரைக்கிற வகையிலே போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த வெற்றியைக் கண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 2-40

உண்மை உறங்குகிறபோது, பொய்கள் ஊர்வலம் வருவதற்குத் துடிக்கலாம். உண்மை விழித்தெழுந்தால் இந்தப் பொய்கள் போகிற இடம் தெரியாமல் பொசுங்கிப் போகும் என்பதை வரலாறு எப்போதும் காட்டிக்கொண்டேயிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்த அணை புவி ஈர்ப்பு விசையின் அடிப்படையிலே கட்டப்பட்டிருக்கிறது. புவி ஈர்ப்பு விசை என்ற அந்த விசை, அந்தப் புனிதத் தன்மை, கல்லணையைக் கட்டிய கரிகாலன் காலத்திலே உருவாக்கப்பட்ட அந்தத் தன்மையின் அடிப்படையிலே எழுப்பப்பட்ட அந்த அணை இதுவரையிலே உறுதிமிக்கதாக இருக்கிறது என்ற சான்றுகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபடுத்தினார்கள். புவி ஈர்ப்பு விசை எப்படி ஒரு சக்தி படைத்ததோ, அதைப்போல மக்களின் ஈர்ப்பு விசையால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை விஷமப் பிரச்சாரங்கள் வந்தாலும் எத்தனை சதிகள் வந்தாலும், அவற்றையெல்லாம் முறியடித்து, எவ்வாறு முல்லைப் பெரியாறு அணையின் கொள்ளளவை 142 அடிக்கு உயர்த்துவதற்கு ஒரு மாபெரும் வெற்றியை, இலக்கணத்தை தமிழகத்தில் உருவாக்கியிருக்கிறாரோ, அதைப்போல, எதிரிகளின் கனவுகளை முறியடித்து--அந்தக் கனவுகள் எப்போதும் பலிக்காது, பலிக்காது என்பதையும் நாட்டுக்குத் தெளிவுபடுத்துவார் என்கிற நம்பிக்கையோடு, இதனை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழ் மண்ணின் வறண்டு கிடந்த தென் மாவட்ட மக்களினுடைய வாழ்வாதாரம் செழிக்க இலட்சக்கணக்கான விவசாயிகளின் குடும்பங்களைப் பஞ்சத்திலிருந்து, பசியிலிருந்து

[திரு. உ. தனியரசு] [2014 டிசம்பர் 4

மீட்டெடுக்க வெள்ளைக் கால்வாய் 1886-லே துவக்கப்பட்டு, 9 ஆண்டுகளிலே கட்டி முடிக்கப்பட்ட முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை தமிழ்நாட்டு மக்களெல்லாம் கோரிக்கை வைத்து, தமிழ்நாட்டினுடைய பொறியாளர்கள், மத்திய நீர் வள ஆதாரத் துறையினுடைய பொறியாளர்கள் 'அணை உறுதியாக இருக்கிறது, பாதுகாப்பாக இருக்கிறது' என்று திரும்பத் திரும்பச் சொல்லியபொழுதும்கூட கேரள அரசு, சகோதர உணர்வையெல்லாம் மறந்துவிட்டு, தமிழ்நாட்டுக்குச் சேரவேண்டிய உரிமையுள்ள நீரை, 152 அடி கொள்ளளவு கொண்ட அணையினுடைய நீர்மட்டத்தை 136 அடியாகக் குறைத்து தமிழ்நாட்டுக்கு வஞ்சகம் செய்தது. அப்படி தமிழ்நாட்டு மக்களுக்கு, விவசாயிகளுக்கு, தமிழ்நாட்டு ஆற்று நீர் உரிமையிலே வஞ்சகம் செய்த கேரள அரசை எதிர்த்து 37 ஆண்டுகள் கடுமையாகப் போராட்டம் நடந்தபோதும், தமிழ்நாட்டினுடைய ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தினுடைய பேராதரவைப் பெற்றிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) 2006 ஆம் ஆண்டிலே ஒரு மிகச்சிறந்த, வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பினை உச்ச நீதிமன்றத்திலே பெற்றார்கள்.

136 அடியாக குறைக்கப்பட்ட இந்த அணையினுடைய அளவை 142 அடியாக முதற்கட்டமாக உயர்த்துவதற்கும், மீண்டும் அணையின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட பிறகு 152 அடியான முழுக் கொள்ளளவையும் பயன்படுத்துவதற்கும் உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்த பிறகு, கேரள அரசு கொஞ்சம்கூட மனிதாபிமானம் இல்லாமல் இந்தியாவினுடைய உச்ச நீதிமன்றத் தீர்ப்பையே மறுக்கின்ற வகையிலே, சட்டமன்றத்திலே கேரள பாசன மற்றும் நீர் பாதுகாப்புத் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தது. அந்தச் சட்டத்தை ஏற்க மறுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் உச்ச நீதிமன்றத்தை அணுகி--2011 ஆம் ஆண்டில் மூன்றாவது முறையாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து, கேரள அரசைக் கண்டித்து, இதே சட்டமன்றத்திலே நாம் ஒரு தீர்மானம் கொண்டுவந்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானத்தினுடைய விளைவு 7-5-2014 அன்று இந்திய அரசமைப்பு சட்டத்தினுடைய 5 நீதிபதிகளைக் கொண்ட அந்த அமர்வு அணையின் கொள்ளளவை 142 அடியாக

2014 டிசம்பர் 4] [திரு. உ. தனியரசு]

உயர்த்திக்கொள்வதற்கு தடையேதும் இல்லை என்று உறுதிபட ஆணையைத் தந்த பிறகு அந்த ஆணையைப் பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 37 ஆண்டுக்காலமாக தமிழ்நாட்டு முல்லைப் பெரியாற்றின் மறுதலிக்கப்பட்டிருக்கிற அந்த உரிமையை மீட்டெடுத்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 7-5-2014-ல் நமக்கு ஆணை கிடைக்கிறது--1-7-2014 அன்று மத்திய அரசிதழில் அதை ஆணையாகப் பிறப்பிப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்தி, வெற்றி கண்டவரும் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் 17-7-2014 அன்று 142 அடிவரை தண்ணீரை உயர்த்த அடைப்பான்கள் இறக்கப்பட்டு, 21-11-2014 அன்று 142 அடி உயர்த்தப்பட்டுவிட்டது என்பது ஒரு நல்ல செய்தி.

பிற்பகல் 2-45

இந்த 2014 ஆம் ஆண்டிலேயே, இந்த ஓராண்டுக்கு உள்ளாகவே, இயற்கையும்கூட நமக்கு ஒத்துழைத்திருக்கிறது. 142 அடி வரை தண்ணீரை உயர்த்த சட்டப்பூர்வமாகப் போராடி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆற்றின் உரிமையை வென்று, அணையின் எல்லா வகையான பாதுகாப்புகளும் உறுதிப்படுத்தப்பட்ட பிறகு, 142 அடி வரை தண்ணீரை உயர்த்தியிருக்கிற, தமிழகத்தினுடைய ஒப்பற்ற மக்களின் பேரன்பைப் பெற்றிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அந்த எண்ணத்தை, கனவை நனவாக்குவதற்கு இயற்கையே கொடையாக அமைந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு, மூன்று நாட்களில் பெய்த மழையால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனவை நனவாக்கும்விதமாக அந்த அணை உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட அந்த 142 அடி அளவை எட்டி, தமிழ்நாட்டு மக்களுக்குப் பயன்பட்டிருக்கிறது. இப்படி இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு மக்களுடைய ஜீவாதார உரிமையை மீட்டெடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அரசுக்கு, அவர்கள் எடுத்துக்கொண்ட அந்த முயற்சியை நம்முடைய மாமன்றம் பாராட்டவேண்டும். மேலும், அதனுடைய முழு கொள்ளளவாக இருக்கிற 152 அடி வரை தண்ணீரைத் தேக்குவதற்கு கேரள அரசு ஒத்துழைக்கவேண்டும், அதற்கு மத்திய அரசு கேரளாவுக்கு உரிய அறிவுரைகள் வழங்க வேண்டுமென்கின்ற தமிழக அரசினுடைய தீர்மானத்தை நான் மனமார, மிகுந்த

[திரு. உ. தனியரசு] [2014 டிசம்பர் 4

மகிழ்வோடு வழிமொழிந்து வாய்ப்புக்கு நன்றி பாராட்டி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முல்லைப் பெரியாறு அணையினுடைய தனித் தீர்மானத்தை இன்றையதினம் இந்த அவையிலே சமர்ப்பித்திருக்கின்றார்கள்; முன்மொழிந்திருக்கின்றார்கள். அதை எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி சார்பாக மனமார வழிமொழிந்து, வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட 5 மாவட்டங்களினுடைய ஜீவாதார உரிமையாகும். இந்த முல்லைப் பெரியாறு அணை கடந்த 37 ஆண்டுகளுக்குப் பின்னால், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்திலே அணுகிய முறையின்கீழ், இந்த அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்த உச்ச நீதிமன்றம் ஆணையிட்டிருக்கின்றது. இதனால் உண்மையிலேயே ஐந்து மாவட்ட மக்களுடைய கிட்டத்தட்ட 2¼ இலட்சம் ஏக்கர் நிலங்களின் பாசனத்திற்குப் பயன்படுகின்றது. இன்னும் சொல்லப்போனால், 65 இலட்சம் மக்கள் அதை குடிதண்ணீருக்குப் பயன்படுத்துகின்றார்கள். 5 பாராளுமன்றத் தொகுதிகள் மற்றும் 21 சட்டமன்றத் தொகுதிகள் இதில் அடங்கியிருக்கின்றன. இப்படி இந்த மக்களுக்கெல்லாம் பயன்படக்கூடிய ஒரு நல்ல திட்டத்தை, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சீரிய முயற்சியோடு, நீதிமன்றத்தை நாடி, இந்த உத்தரவைப் பெற்றுத் தந்திருப்பது பாராட்டுக்குரியது. அதை நானும் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில், இந்தத் தீர்ப்பு 7-5-2014-ல் வந்தது. 17-7-2014 அன்று இந்தத் தீர்ப்பு அமல்படுத்தப்பட்டது. அதாவது இரண்டு மாத காலத்திற்குள் அந்தத் தீர்ப்பை அமல்படுத்திய பெருமை மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு என்பதை நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2014 டிசம்பர் 4] [திரு. பி.வி. கதிரவன்]

பிற்பகல் 2-50

அதே நேரத்தில், இயற்கையே உவந்து, கடந்த 21-11-2014 அதாவது தீர்ப்பு வழங்கிய ஆறே மாதத்தில் அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயர்ந்திருப்பது, உண்மையிலேயே இந்த மக்கள்மீது, மாண்புமிகு மக்களின் முதல்வர் அக்கறையோடு இருக்கின்றார் என்பதை நிரூபித்துக் காண்பித்திருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உச்ச நீதிமன்றத்திலே ஐந்து நீதிபதிகள் அமர்ந்து இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். கேரள அரசு தொடர்ந்து அதை மறுபரிசீலனை செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டிருக்கிறது. உச்ச நீதிமன்றம் என்னென்ன சொல்லியிருக்கிறதோ, அவற்றைத் தமிழக அரசு செய்திருக்கிறது. அந்த அணையின் பாதுகாப்பிற்காக, அணையைப் பலப்படுத்துவதற்காக என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறதோ தமிழக அரசு சார்பாக அவை அனைத்தும் செய்யப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே செய்தும்கூட, கேரள அரசு இன்னும் தடுக்க முயற்சித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், நேற்று உச்ச நீதிமன்றம் கேரள அரசின் மனுவைத் தள்ளுபடி செய்திருக்கிறது. அதற்குக் காரணம், அணையின் நீர்மட்டம் 142 அடியிலிருந்து, 152 அடியாக உயர்த்தப்பட வேண்டுமென்பதே உச்ச நீதிமன்றத்தின் நோக்கம். அந்த அணை அவ்வளவு சிறப்பாக, பாதுகாப்பாகக் கட்டப்பட்டிருக்கிறது என்பதைக் குழு உறுதி செய்துள்ளது. அந்த அடிப்படையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது, மத்திய அரசு இதிலே தலையிட்டு, கேரள அரசு இன்னும் இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபடக்கூடாது, உச்ச நீதிமன்றத்தை அணுகக்கூடாது; முறையாக உச்ச நீதிமன்றம் என்ன வழி வகுத்திருக்கிறதோ அதை வழிநடத்தவேண்டுமென, கேரள அரசை மத்திய அரசு கேட்டுக்கொள்ள வேண்டுமென வலியுறுத்திய தீர்மானத்தை எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி சார்பாக வழிமொழிந்து, வாழ்த்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்

[திரு. ஆ. நாராயணன்] [2014 டிசம்பர் 4

அரசின் தனித் தீர்மானத்தை இங்கே முன்மொழிந்தார்கள். அவர்கள் முன்மொழிந்ததை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக நான் வழிமொழிகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் சுமார் 2.23 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற வழிவகுக்கும் முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தவேண்டுமென பல சட்டப் போராட்டங்கள் மூலமாக வெற்றியை வாங்கிக் கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் என் நன்றியைச் சொல்லி, முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக இருப்பதாகவும், உடைந்துவிடுமென்றும், சீனாவிலே இருக்கின்ற Ru ஆற்றில் உள்ள அணை உடைந்துவிட்டது என்றும் கட்டுக்கதை கட்டி இந்தப் பிரச்சினையை, ஏற்கெனவே கேரள அரசு தடை செய்துகொண்டிருந்தது. Ru ஆற்றில் உள்ள அணை 1951-ல் கட்டப்பட்டு 1975-ல் உடைந்தது என்று சொன்னார்கள். ஒரு வருடத்தில் வருகின்ற மழையின் அளவு 1000 மில்லியன் மீட்டர். ஆனால் ஒரே நாளில் 1260 மில்லியன் மீட்டர் அளவு மழை வந்த காரணத்தினாலே அந்த அணை உடைந்துவிட்டது என்று சொன்னாலும்கூட, அவர்கள் சட்டப் பிரச்சினைகள் மூலம் நமது அரசுக்குப் பல இடைஞ்சல்களை ஏற்படுத்தினார்கள். இருந்தாலும், அதையும் மீறி சட்டப் போராட்டத்தின் மூலமாக முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தி, அந்த உரிமையை வாங்கிக் கொடுத்த நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மேலும் 142 அடியிலிருந்து 152 அடியாக உயர்த்தவேண்டுமென்ற தீர்மானத்தை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்திற்கு கண்டிப்பாக கேரள அரசும், மத்திய அரசும் உதவி செய்யவேண்டும். இந்தச் சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், எங்கள் தலைவர் சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

2014 டிசம்பர் 4]

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கு ஏதுவாக பேபி அணையை வலுப்படுத்தவும், பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கேரள அரசு தமிழகத்திற்கு முழுமையான ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும் என்ற அறிவுரையை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று தமிழக அரசால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக நான் வரவேற்கின்றேன். இது தொடர்பாக, தமிழக அரசு தொடர்ச்சியாக எடுத்து வந்த நடவடிக்கைகள் காரணமாக, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் தேனி ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஏறத்தாழ 2.23 இலட்சம் ஏக்கர் பாசன வசதி ஏற்பட்டிருக்கிறது. இந்த அணையில் நீண்ட காலமாக தமிழக மக்கள் எதிர்பார்த்தது போல 142 அடி அளவுக்கு தண்ணீர் சேமிக்கப்பட்டிருப்பதும் உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய விஷயங்கள்.

பிற்பகல் 2-55

இதுதொடர்பாக, பேபி அணையை வலுப்படுத்தவும், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடி அளவுக்கு உயர்த்துவதற்கு கேரள அரசு ஒத்துழைக்கவேண்டும் என்றும் இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுபோல, மத்திய அரசு இது தொடர்பாக கேரள அரசுக்கு உரிய அறிவுரைகளை வழங்கவேண்டுமென்றும் இந்தத் தீர்மானம் வலியுறுத்தியிருப்பதை நான் வரவேற்கின்றேன்.

[முனைவர் எம். எச். ஜவாஹிருல்லா] [2014 டிசம்பர் 4

அதேநேரத்தில், இந்த முல்லைப் பெரியாறு அணையினுடைய பாதுகாப்பு தமிழகக் காவல் துறையிடம் கடந்த காலங்களிலே இருந்தது. தற்போது அங்கு நம்முடைய அதிகாரிகள் செல்வதற்குக்கூட கேரள அரசு பல இடையூறுகளைச் செய்து வரக்கூடிய இந்தச் சூழ்நிலையில், முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பை தமிழக காவல் துறையிடமே ஒப்படைக்க வேண்டுமென்றும் நாம் மத்திய அரசை வலியுறுத்தவேண்டும்.

அதேபோன்று, நம்முடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையிலே சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை வலியுறுத்துவதற்காக தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் விவசாய சங்கத்தினுடைய பிரதிநிதிகளை நேரடியாக பிரதம மந்திரியிடம் அழைத்துச் செல்லக்கூடிய ஓர் ஏற்பாட்டையும் தமிழக அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மொத்தத்தில் இந்தத் தீர்மானத்தை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 37 ஆண்டுகளாக தீர்க்கப்படாத பிரச்சினையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்கீழ் செயல்படுகின்ற அரசு இன்றைக்கு தீர்த்து வைக்கிறது என்று சொன்னால், அம்மா அவர்களுடைய துணிவு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, (மேசையைத் தட்டும் ஒலி) தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்கின்ற அந்த உணர்வு, தமிழ்நாட்டு மக்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணங்களின் பிரதிபலிப்பாக இருக்கின்றது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பொதுவாகச் சொல்ல வேண்டுமென்றால், நாம்கூட கார் வாங்குகின்றோம்; அதில் மணிக்கு 140 கிலோ மீட்டர் தூரம் போகலாம், 150 கிலோ மீட்டர் தூரம் போகலாம் என்று இருக்கிறது; ஆனால், நாம் அந்த அளவுக்கு ஓட்ட முடியாது; மணிக்கு 100 கிலோ மீட்டர் தூரம் போகலாம். ஆனால், முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி அளவுக்கு தண்ணீர் நிரப்ப முடியாது என்று அண்டை மாநிலம் சொன்னாலும், அதற்கு இயற்கை எந்த

2014 டிசம்பர் 4] [திரு. ம. கலை அரசு]

அளவுக்கு நமக்கு உறுதுணையாக இருக்கிறது என்பதற்கு, அண்மையில் பெய்த மழையைச் சான்றாகச் சொல்லலாம். அம்மா அவர்கள் நினைத்தபடி 142 அடி வரை தண்ணீர் நிறைந்திருப்பதற்கு இயற்கையே நமக்கு உதவியாக இருந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய அம்மா அவர்களுடைய முயற்சி, தமிழகத்தை இந்தியாவில் முதல் மாநிலமாக உயர்த்தும் என்பதற்கு ஐயப்பாடு ஏதும் இல்லையென்று சொல்லி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கும், அதற்கு கேரள அரசு ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும், மத்திய அரசு கேரள அரசுக்கு இது தொடர்பாக தகுந்த அறிவுரைகளை வழங்கவேண்டுமென்றும் கோரி, தீர்மானத்தைக் கொண்டு வந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். (குறுக்கீடு) ஏற்கெனவே தமிழகத்திலுள்ள ஒட்டுமொத்த அரசியல் கட்சிகளின் கோரிக்கையாக இருந்துவரும், தமிழக காங்கிரஸ் கட்சி உட்பட அனைத்து கட்சிகளின் கோரிக்கையாக இருந்துவரும், 152 அடிவரை நீர்மட்டத்தை உயர்த்துவதற்கான அந்த முன்மொழிவையும், காங்கிரஸ் கட்சி, தமிழ்நாட்டில் நிச்சயமாக தமிழக காங்கிரஸ் கட்சி, தமிழக சட்டமன்ற காங்கிரஸ் கட்சியும் ஆதரிக்கும் என்பதைத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் பெயரை மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் மாற்றியிருக்கிறார் என்று நான் கருதுகிறேன். அகில இந்திய காங்கிரஸ் கட்சி என்றுதான் அதற்குப் பெயர். இவர் தமிழக காங்கிரஸ் என்று குறிப்பிட்டிருக்கிறார்; மாநில காங்கிரஸ் என்கிறார்; அதிலேயும் இப்போது பிளவுபட்டுப் போயிருக்கிற காங்கிரஸ் கட்சியிலே எந்தக் காங்கிரஸைச் சார்ந்தவர் என்பதை அவர் இங்கே விளக்கவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

[2014 டிசம்பர் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

பிற்பகல் 3-00

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக கை சின்னத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்ற விவரம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரியாததல்ல. இந்திய தேசிய காங்கிரஸ் அகில இந்திய அளவில் இருந்தாலுங்கூட, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி என்று தமிழ்நாட்டில் வழக்கமாகக் கூறுவது வழக்கம். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி என்றுதான் கூறுவது வழக்கம். எனவே, அந்த நடைமுறையைத்தான் நான் பின்பற்றினேன். ஆகையால், பிளவுபட்ட காங்கிரஸ் என்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி எஸ். விஜயதரணி தங்களது விளக்கம் போதும், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் குடிநீர், விவசாயம் மற்றும் பல்வேறு வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு அடிப்படையாக இருக்கக்கூடிய முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை சம்பந்தமாக, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் முழுமனதோடு வரவேற்கிறேன்.

குறிப்பாக, 39 ஆண்டுகளுக்கு முன்னால் துவங்கப்பட்ட இப்பிரச்சினையில், பல தடைகளைக் கடந்து, இன்றைக்கு வெற்றிகரமாக, 75 சதவிகித வெற்றியோடு நாம் நின்று கொண்டிருக்கிறோம். முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுப்பதற்கு தமிழக அரசு எடுத்திருக்கின்ற முடிவுகளுக்கு, கேரள அரசு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்ற ஒரு நல்ல, நிதானமான தீர்மானத்தை, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அவையில் முன்மொழிந்திருக்கிறார்கள்.

2014 டிசம்பர் 4] [திரு. கு. குணசேகரன்]

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில், அண்டை மாநிலமான கேரள அரசு, ஆத்திரம் ஏற்படுத்தக்கூடிய, பதற்றத்தை ஏற்படுத்தக்கூடிய, அச்சமூட்டக்கூடிய பல செய்திகளை எவ்வளவோ வெளியிட்டும், அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக, உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பைக்கூட செயல்படுத்துவதற்கு மாறாக, 2006 ஆம் ஆண்டு கேரள மாநில சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதன்மூலமாக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினையே முடக்குவதற்கான ஒரு முயற்சியை எடுத்ததும் இந்திய ஜனநாயகத்தில் ஏற்புடைய செயல் அல்ல.

2006 ஆம் ஆண்டு தமிழக அரசால் இதனை எதிர்த்து வழக்கு பதிவு செய்யப்பட்டு, உச்ச நீதிமன்றம் 7-5-2014 ஆம் தேதி ஒரு நல்ல தீர்ப்பினை வழங்கியிருக்கிறது. இதற்குப் பின்புதான் நல்ல கிளைமேக்ஸ் இருக்கிறது. 7-5-2014 அன்று தீர்ப்பு வழங்கியதற்குப் பின்னர், மத்திய நீர் வள குழுமம், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களின் சார்பில் மூன்று உறுப்பினர்களை நியமித்து, முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 142 அடிக்கு உயர்த்தவேண்டும் என்ற தீர்ப்பை கேரள அரசு மீண்டும் சட்டத்தின் வாயிலாகவோ, அல்லது வேறு வழக்குகளின் வாயிலாகவோ தடை செய்வதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு முன்னாலேயே, நமது மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் 1-7-2014 அன்று மத்திய அரசிதழிலே அந்தத் தீர்ப்பை வெளியிட வைத்து, மீண்டும் உடனடியாக பாரதப் பிரதமரைச் சந்தித்து 17-7-2014 ஆம் தேதி அந்த அணையின் மேற்பார்வைக் குழுவின் கூட்டத்தை இரண்டாவது முறையாகக் கூட்டி, அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்தி, தண்ணீரைத் தேக்குவதற்கான அடைப்பான்களை இறக்கி, அதற்கான சாதனையை தமிழக அரசு புரிந்திருக்கிறது.

கடந்த மூன்று ஆண்டுகளாக வறட்சி ஏற்பட்டிருக்கின்ற நிலையில், இயற்கையே நாம் பெற்ற நீதிக்கு தலைவணங்கி, அந்தப் பகுதியில் ஒரு நல்ல மழைப் பொழிவை ஏற்படுத்தி, நான்கு மாதங்களுக்குள்ளாக 21-11-2014 அன்று முல்லைப் பெரியாறு அணையில் 142 அடிவரை தண்ணீர் எட்டுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. எனவே, இயற்கை நமக்கு அளித்திருக்கின்ற ஒரு நல்ல சூழலுக்கு, நாம் முதலிலே இயற்கைக்கு நமது நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சு. குணசேகரன்] [2014 டிசம்பர் 4

அந்த அடிப்படையில் இன்றைக்கு 142 அடி உயரத்திற்குத் தண்ணீர் தேங்கியிருக்கின்ற நிலையில், அடுத்த கட்டமாக 152 அடிவரை தண்ணீர் தேக்கிவைக்க ஏதுவாக அணை உயர்த்தப்படவேண்டும். ஆனால், அதற்கும் இன்றைக்கு கேரள அரசு முழு ஒத்துழைப்பை வழங்காத ஒரு நிலை நீடிக்கின்றது.

நமது உயர் அதிகாரிகள் சமீபத்தில் அங்கே தாக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய கேரள போலீசார் பல தடைகளை அங்கே உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, பேபி அணையைப் பலப்படுத்த வேண்டுமென்று சொன்னால், அந்த அணையை மத்திய பாதுகாப்புப் படையின்கீழ் கொண்டுவர வேண்டும். முல்லைப் பெரியாறு அணையைப் பலப்படுத்துவதற்கு தமிழக அரசு எடுக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு செல்வது உட்பட எல்லாவிதமான நடவடிக்கைகளையும் பல காரணங்களால் கேரள அரசு தடை செய்வதைத் தடுத்து நிறுத்துவதற்கு மத்திய அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

இன்றைக்கு மத்திய நீர் வள குழுமம், தமிழ்நாடு, கேரள மாநில அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு அந்த அணையினுடைய நீர் மட்டத்தை உயர்த்த ஒவ்வொரு கட்டமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், அந்த அணையின் எல்லாவித கட்டுப்பாடுகளையும் கேரள அரசிடமிருந்து மாற்றி, மத்திய நீர் வளக் குழுமத்தின் வசம் ஒப்படைப்பதன்மூலம் விரைந்து அந்த பேபி அணையைப் பலப்படுத்துவதற்கான வாய்ப்புகள் அமையும் என்பது எங்களுடைய கட்சியின் சார்பாக நாங்கள் முன்வைக்கின்ற கருத்து. அந்த அடிப்படையில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். கேரள அரசு மீண்டும், மீண்டும் மக்களை அச்சுறுத்தக்கூடிய பல செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருப்பது தவறான ஒரு செயல் ஆகும்.

பிற்பகல் 3-05

அதேபோன்று, அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயர்ந்திருக்கிற இந்நேரத்தில், நீர்ப்பிடிமான பகுதிகளில் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள்பற்றி பட்டவர்த்தனமாகத் தெரிய வந்துள்ளன. ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள ஹோட்டல்கள், நட்சத்திர ஹோட்டல்கள் போன்றவற்றை நீர் சூழ்ந்திருக்கின்றன என்று பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். எனவே,

2014 டிசம்பர் 4] [திரு. சு. குணசேகரன்]

மத்திய அரசு தலையிட்டு, 152 அடி உயரமுள்ள, நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருக்கக்கூடிய ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். "மனிதன் குடியிருக்கின்ற வீடுகள்கூட நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருக்கக்கூடாது" என்று உச்ச நீதிமன்றமே உறுதியாக தீர்ப்பு வழங்கியிருக்கின்ற இத்நேரத்தில், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் உள்ள, ஏழை மக்களின் வாழ்வாதாரமான குடிசை வீடுகளைக்கூட அப்புறப்படுத்தக்கூடிய இந்நேரத்தில், மிகப்பெரிய அணை இருக்கக்கூடிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமல் உள்ளன என்பது உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிரான செயல். எனவே, அதனை உடனடியாக அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பேபி அணையை விரைவில் பலப்படுத்தி, நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாக 5 மாவட்டங்களில் உள்ள சுமார் 2 இலட்சத்து 23 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுவதோடு, நெல், தானியங்கள் போன்ற விவசாய உற்பத்தியும் பெருக முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானம் மிகுந்த நிதானத்தோடு, சிறப்பாக முன்மொழியப்பட்டிருக்கிறது. எவ்வளவோ ஆத்திரமூட்டக் கூடிய செயல்கள் நடைபெற்றாலும், "யாதும் ஊரே; யாவரும் கேளீர்" என்று சொல்லக்கூடிய தமிழர்களின் பண்பாட்டின் அடிப்படையில், நிதானத்தோடு அணுகக்கூடிய இந்தத் தீர்மானத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மீண்டும் வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து தமிழகம் அண்டை மாநிலங்களால் நதி நீர் தாவா பிரச்சினைகளால் வஞ்சிக்கப்பட்டு வருகிறது. பல நேரங்களில் சாகுபடி அழிந்து, குடிதண்ணீருக்குக்கூட அவதிப்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில் ஏறக்குறைய 35 ஆண்டுகளுக்கு மேலாக போராடி உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு 7-5-2014 அன்று பெறப்பட்டது. அதனடிப்படையில் அணையினுடைய நீர்மட்டத்தை 142 அடியாக

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2014 டிசம்பர் 4

உயர்த்தியிருப்பதை வரவேற்கிறேன். மேலும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில், பேபி அணையை வலுப்படுத்தவும், அந்த அணையினுடைய நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கும் கேரள அரசு ஒத்துழைப்பு நல்கவேண்டும்; மத்திய அரசு கேரள அரசுக்கு உறுதியான ஆலோசனைகளை வழங்கி அதனை நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற தீர்மானத்தை நான் வரவேற்கிறேன்.

அதேபோன்று, காவேரி பிரச்சினை தொடர்பாக டெல்டா மாவட்டங்களில் இன்றைக்கு நடைபெறுகின்ற போராட்டத்தின் அடிப்படையில், நாளை ஒரு தீர்மானத்தை இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விரோதமாக, கர்நாடக அரசாங்கம், மேகதாது பகுதியில் தடுப்பணை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த நடவடிக்கைகளைக் கண்டித்து தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தியிருப்பது தமிழகம் பெற்றிருக்கும் ஒரு வரலாற்றுச் சாதனை ஆகும். இதில், உண்மையிலேயே யாருக்கும் இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது. குறிப்பாக, இது தமிழகம் பெற்றிருக்கின்ற வரலாற்றுச் சாதனை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தென் மாவட்ட மக்களுடைய நீண்ட காலக் கனவு இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அவர்களுடைய கனவு நிறைவேற்றப்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில்--கேரள அரசு ஒரு சகோதர உணர்வுகூட இல்லாமல், பல நேரங்களில் அணையினுடைய பாதுகாப்பு என்கிற பிரச்சினையைக் கிளப்பி, நீண்ட நெடிய வாதங்களையெல்லாம் ஏற்படுத்தி, அந்த அணையின் நீர்மட்டத்தை உயர்த்தாமல் இருப்பதற்கு தடைகளை ஏற்படுத்தி வந்தார்கள். கேரள அரசினுடைய வாதங்கள் எதிலும் உண்மை இல்லை என்று உச்ச நீதிமன்றம் நிராகரித்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இறுதித் தீர்ப்பு வந்தபிறகும்கூட, கேரள அரசு இரண்டு தினங்களுக்கு முன்பு, உச்ச நீதிமன்றத்தில், மீண்டும் மறு ஆய்வு செய்யவேண்டும் என்று மறுசீராய்வு மனுவைப் போட்டது. கேரள அரசின் அந்த வாதத்தையும் உச்ச நீதிமன்றம் நிராகரித்து,

2014 டிசம்பர் 4] [திரு. க. பாலகிருஷ்ணன்]

அந்த வழக்கைத் தள்ளுபடி செய்ததோடு மட்டுமல்லாமல், 7-5-2014 அன்று அளித்த தீர்ப்புதான் இறுதியான தீர்ப்பு என்று மீண்டும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. கேரள அரசினுடைய வாதத்தில் உண்மையில்லை; 142 அடியாக உயர்த்தினால் அணை உடைந்துவிடுமென்பதும் விஞ்ஞானத்திற்குப் புறம்பானது என்கிற வாதமும், தற்போது 142 அடியாக உயர்த்தப்பட்டபிறகு அந்த அணை கம்பீரமாக நிற்பதிலிருந்தே பொய்த்துப்போனது என்பது இன்றைக்கு நிலைநாட்டப்பட்டிருக்கிறது. எனவே, நிச்சயமாக நாம் எடுத்திருக்கிற இந்த முயற்சிக்குக் கிடைத்திருக்கிற வெற்றியென்பது, அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடியது. ஆனால் அதே சமயத்தில், இந்தப் பணியை நாம் இன்னும் தொடர வேண்டியிருக்கிறது. தீர்மானத்தினுடைய கடைசி பகுதியிலே சொல்லியிருப்பதைப்போல, 152 அடியாக அந்த அணையினுடைய நீர்மட்டத்தை உயர்த்துவதுதான், தமிழகத்தினுடைய 100 சதவிகித வெற்றியென்பதை உணர்ந்து அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும்; அதற்கு நாம் அனைவரும் இணைந்து குரல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-10

மீண்டும் மீண்டும் கேரளத்தில் இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள், நம்முடைய பொறியாளர்கள் அங்கே செல்வதற்கும், பேபி அணையைப் பலப்படுத்தும் பணிகளைத் தடுக்கவும் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய அதிகாரிகளுக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்படுகிறது. அதிகாரிகள் தாக்கப்படக் கூடிய அச்சம் தருகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் தடுத்து, உரிய பாதுகாப்பு ஏற்பாட்டினை மத்திய அரசு வழங்குவதற்கு நாம் வற்புறுத்தவேண்டுமென்று இந்த நேரத்திலே தமிழக அரசையும் கேட்டுக்கொள்கிறேன். எனவே, இப்படிப்பட்ட இந்த மகத்தான நல்ல நேரத்தில் இதற்காக நாம் நடத்தியிருக்கின்ற வழக்குகள், நாம் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் அனைத்தையும் பாராட்டுகிற அதே நேரத்தில், இந்த மகத்தான வெற்றியைப் பெறுவதற்கு, தமிழகத்திலே இருக்கிற அனைத்து விவசாயச் சங்கங்களும் போராடியிருக்கின்றன; அனைத்து அரசியல் கட்சிகளும் சேர்ந்து போராடியிருக்கின்றன. தொழிலாளர்கள், பத்திரிகையாளர்கள், ஊடகங்கள் போன்ற அனைவரும், சேர்ந்து ஒன்றுபட்ட குரலோடு நடத்திய அந்த மகத்தான

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2014 டிசம்பர் 4 போராட்டம் இன்று வெற்றி பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒன்றுபட்ட போராட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றி செலுத்துகிறவகையிலே அந்தத் தீர்மானத்தில் ஒரு வாக்கியம் சேர்த்துக்கொள்வது இன்னும்கூட பொருத்தமாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், ஆரம்பத்தில் உச்ச நீதிமன்றத்தில் இப்பிரச்சினையில் வழக்குத் தொடுத்தது ஒரு விவசாயச் சங்கம்தான். அதற்குப் பிறகுதான் அந்த வழக்கிலே தமிழக அரசு தன்னை பார்ட்டியாக சேர்த்துக்கொண்டது என்ற அடிப்படையில் அவர்களையெல்லாம் பாராட்டுகிற முறையிலே இந்தத் தீர்மானம் அமைந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பிறகு, முல்லைப் பெரியாறு அணையில் 142 அடியாக தண்ணீரை நிரப்பியிருப்பது அதை உபயோகிக்கின்ற ஆறு-ஏழு மாவட்டங்களுக்கு மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் பெரும் மகிழ்ச்சிக்குரியது. இந்த வெற்றி, மகிழ்ச்சி, சாதாரணமாக நமக்கு வந்ததல்ல; நீண்ட நெடிய போராட்டம்; ஏராளமான பணச் செலவுகள்; அணையைப் பலப்படுத்தவேண்டும் என்பதற்கு நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள், கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல; உச்ச நீதிமன்றத்தின் நீண்ட நெடிய படிக்கட்டுகளில் நாம் எத்தனை முறை ஏறி இறங்கியிருக்கிறோம் என்பது நமக்குத் தெரியும். அதேபோல், நண்பர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னதைப்போல், ஆட்சியிலே இருப்பவர்கள் மட்டுமல்ல, அரசியலில் பங்கு பெறும் அனைத்துக் கட்சிகள், விவசாயிகள், அதன் பலனை அனுபவிப்பவர்கள், இவர்களெல்லாம் எடுத்துக்கொண்ட முயற்சியும், கொஞ்சநஞ்சமென்று சொல்ல முடியாது. ஆக, இது ஒரு கூட்டு முயற்சியால் வந்திருக்கின்ற வெற்றி. காரணம், அணையைப் பலப்படுத்த வேண்டுமென்று முதலில் மூன்று கட்ட திட்டத்திற்கு பணம் ஒதுக்கி, அணையை பலப்படுத்துவதற்கான முயற்சியை எடுத்தவர், நம்முடைய முன்னாள் முதலமைச்சர், மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். ஆனால், அவருக்கு இதிலே

2014 டிசம்பர் 4] [திரு. துரைமுருகன்]

நன்றி இல்லை. அதற்கு பிறகு, எங்களுடைய தலைவர், கலைஞர் அவர்கள், இந்த அணையைப் பலப்படுத்துவதற்கு எடுத்துக்கொண்ட பணிகள் கொஞ்சநஞ்சம் அல்ல. 10, 15 ஆண்டுக்காலம் நான் அந்த இலாகாவை வகித்தவன், நான் எவ்வளவு பணிகளைச் செய்திருக்கிறேன் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவார்கள். அவருடைய காலத்தில் எவ்வளவு பணிகள் நடந்தது என்பதும் எனக்குத் தெரியும். அது மட்டுமல்ல; இன்றைக்கு நீர்மட்டம் 142 அடி வந்திருக்கிறதே, இது, எதனால் வந்தது? அதைத்தான் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னார்கள், கேரளத்து விவசாயிகள் கேரள உயர் நீதிமன்றத்திலே வழக்குப் போட்டார்கள். நம்முடைய ஊர்க்காரர்கள் இங்கே உயர் நீதிமன்றத்திலே வழக்குப் போட்டார்கள். ஒரே சூழலைப் பற்றி இரண்டு உயர் நீதிமன்றங்களில் வழக்கு இருந்தால், அதை விசாரிப்பதற்கு உச்ச நீதிமன்றத்திற்குப் போகவேண்டும். ஆக, இந்த இரண்டு petition-களையும் transfer petition-களாக உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றியது எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (குறுக்கீடு) நான் வெறும் history தான் சொல்கிறேன், தெரிந்துகொள்ளுங்கள். வழக்கை மாற்றியதுதான். அங்கே போன பிறகு அவர்கள் என்ன சொன்னார்கள்? வழக்கு வந்த பிறகு, 8 வாரம் தருகிறேன் என்று இரண்டு மாநில முதலமைச்சர்களும் பேசிப் பாருங்கள் என்று சொன்னார்கள். அந்தநேரத்திலே கேரள மாநிலம், திருவனந்தபுரத்திற்குப் போய் அதே நேரத்திலே சென்னையிலும், டெல்லியிலும் இரண்டு முறை பேசியும் பலனில்லை என்று மத்திய சர்க்காருக்குத் தெரிவித்தது எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதன் பிறகு, அணையின் பலத்தை அறிய வேண்டுமென்பதற்காக திரு. மிட்டல் தலைமையிலே ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டி அமைக்கப்பட்டதும் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்தில்தான். அந்த மிட்டல் கமிட்டிதான் ஆய்ந்து பார்த்து, அணை பலமாக இருக்கிறதென்று சொல்ல, அதை ஏற்றுக்கொண்ட பிறகுதான் 27-2-2006-ல் நம்முடைய நீதிபதி சபர்வால் அவர்கள் அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் என்று சொன்னார்கள் என்றால், அது முழுக்க, முழுக்க எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய முயற்சி என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. (குறுக்கீடு) ஆனால் . . .

[2014 டிசம்பர் 4

பிற்பகல் 3-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: பிப்ரவரி மாதம் நீதிபதி அவர்கள் அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தச் சொல்லி ஆணையிட்டார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, நாம் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி அவர்கள் 2006 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் என்று தீர்ப்பு சொன்னார்கள். தேர்தல் வந்தது. தி.மு.க. ஆட்சிக்கு வந்து 5 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்தார்களே, அந்த ஐந்தாண்டுக் காலத்தில் அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தினார்களா? ஐந்தாண்டு காலம் என்ன செய்துகொண்டிருந்தார்கள்? புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போராடி இன்றைக்கு இந்த மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள். இந்த வெற்றிக்குக் காரணமான ஒரே தலைவி, புரட்சித் தலைவி அம்மா, அம்மா, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்கிறார். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 டிசம்பர் 4]

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய திருநாட்டின் வாழும் மனித தெய்வம், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய அயராத உழைப்பால், தன்னுடைய சட்ட நுணுக்கங்களை வைத்து, தனி ஒரு மனிதராக நின்று போராடி முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் வெற்றி பெற்றதால் இன்றைக்கு அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயர்ந்திருக்கிறது. 5 மாவட்ட மக்களுடைய வாழ்வாதாரத்திற்கு ஓர் உத்தரவாதத்தைக் கொடுத்திருக்கிற ஒரு முதலமைச்சர் இன்றைக்கு தமிழகத்திலே மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், அவருடைய தலைவர், அவருடைய முன்னாள் முதலமைச்சருடைய காலத்திலே இந்த அணையைப் பாதுகாப்பதற்காகச் சட்டப் போராட்டம் நடத்தியதாகவும், அந்தச் சட்டப் போராட்டத்தின் மூலமாகத்தான் அணையின் நீர்மட்டம் உயர்ந்தது என்றும் இங்கே சொன்னார்கள். இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறீர்கள், எத்தனையோ முன்னாள் அமைச்சர்கள் இருக்கிறீர்கள், அதிகாரி பெருமக்கள் இருக்கிறீர்கள். நான் ஒன்றே ஒன்று மட்டும் கேட்கிறேன். 2010-ல் கேரள மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்த திரு. அச்சுதானந்தன் அவர்கள், இந்த அணை வலுவிழந்துவிட்டது. இந்த அணை வலுவிழந்துவிட்டதனால், இது உடனடியாக தகர்க்கப்படவேண்டும். புதிய அணை கட்டப்படவேண்டுமென்று சொன்னார். அவ்வாறு கட்ட வேண்டுமென்று சொல்லும்போது, அன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தவர் கருணாநிதி. மத்தியிலே இருந்தது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி காங்கிரஸ் அரசு. அதற்கு முட்டுக்கொடுத்துகொண்டிருந்தவர் திரு. கருணாநிதி. இவர் ஏதாவது ஒரு துரும்பை எடுத்துப்போட்டாரா? திரு. அச்சுதானந்தன் அவர்களிடமிருந்த ஆண்மை, அந்தத் திறமை, அந்த மக்கள்மீது கொண்டிருக்கிற அந்த விசுவாசம் அன்றைக்கு இவருடைய தலைவரிடம் இருந்ததா? (மேசையைத் தட்டும் ஒலி) போராட்டம் என்று அறிவித்தார். மதுரையிலே 5 மாவட்ட மக்களுடைய வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுவதற்காக நான் போராட்டம் நடத்தப்போகிறேன். உடனடியாக மத்திய சர்க்கார் இதில் தலையிட வேண்டுமென்று சொன்னார். பிறகு அவர் என்ன

[திரு. செல்லூர் கா. ராஜு] [2014 டிசம்பர் 4 செய்தார்? அதிலே என்ன வந்தது என்று தெரியவில்லை. 2G ஸ்பெக்ட்ரம் என்று சொல்கிறார்கள். அடுத்து என்ன ஆனது என்றால் (குறுக்கீடு) நான் சொல்ல வருவது (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

பிற்பகல் 3-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வேறு subject-ஐப் பற்றிப் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: சரி. (குறுக்கீடுகள்) நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்துப் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: சரி. முல்லைப் பெரியாறு (குறுக்கீடுகள்) சரி. (குறுக்கீடுகள்) நான் சொல்லி விடுகிறேன். (குறுக்கீடுகள்) ஒன்றுமே வேண்டாம்; இன்னொன்றைச் சொல்லி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு உறுப்பினர்களே, இருங்கள். (குறுக்கீடுகள்) பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். (குறுக்கீடுகள்) வஞ்சிக்கப்பட்டவர்கள் நாங்கள். (குறுக்கீடுகள்) குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், சிக்கிரம் உரையை முடியுங்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: எனவே, திரு. அச்சுதானந்தத்தை எதிர்த்துப் பேசாத முதலமைச்சர் அன்றைக்கு இங்கே இருந்தார். (குறுக்கீடுகள்) மத்தியிலே அன்றைக்கு அதற்காகப் போராடவுமில்லை. கண்டனப் பொதுக் கூட்டம் நடத்துவோம் என்று சொன்னவரும் இவர்களுடைய

2014 டிசம்பர் 4] [திரு. செல்லூர் கா. ராஜு]

தலைவர்தான். கண்டனக் கூட்டமும் நடத்தவில்லை; எதுவுமே செய்யவில்லை. (குறுக்கீடுகள்) உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன் என்று சொன்னார்; உண்ணாவிரதமும் இருக்கவில்லை. (குறுக்கீடுகள்) ஆனால், அன்றைக்கு இந்த அணையைக் காப்பாற்றுவதற்காக எங்களுடைய மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மதுரைக்கு வந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரைக்கு வந்தார்; 19 மிரட்டல் கடிதங்கள் வந்தன; மனித குண்டாக மாறுவோம் என்று சொன்னார்கள். அன்றைக்கு இவர்களுடைய ஆட்சி இருந்தது; காவல் துறை இருந்தது. அப்படிச் சொன்னவர்கள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் போதும்; உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: ஆனால், அதையும் மீறி, அன்றைக்கு அம்மா அவர்கள் உயிரை துச்சமென மதித்து, அங்கே வந்தார். "ஐந்து மாவட்ட மக்களுடைய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிற முல்லைப் பெரியாறு பிரச்சினையில், தமிழகத்தின் உரிமையைக் காப்பாற்றுவேன்; முதற்கட்டமாக 142 அடி அளவிற்கு அணையின் நீர்மட்டத்தை உயர்த்திக் காட்டுவேன். அது முதற்கட்டம். என்னுடைய வாழ்நாளில் 152 அடி அளவிற்கு அணையின் நீர்மட்டத்தை உயர்த்தி, முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் நமது உரிமையைக் காப்பாற்றுவதுதான் எனது இலட்சியம்" என்று சொன்னார்கள். மீண்டும் ஆட்சிக்கு வந்தார்கள்; வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கின்றார்கள். இந்த வெற்றி முழுக்க முழுக்க என் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கே உரித்தானது என்று இந்த மன்றத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள். (குறுக்கீடு)

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: point of order எல்லாம் ஒன்றுமில்லை; உட்காருங்கள்.

[2014 டிசம்பர் 4

திரு. துரைமுருகன்: ஆகையினால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவரது உரையில் பூடகமாகச் சொன்னார்கள். High Court-ல் இரண்டு வழக்குகள் போட்டிருந்தார்கள். அதை transfer செய்தார்கள்; போய்விட்டது என்று சொன்னார்கள். யார் செய்தார்கள் என்று சொல்லவில்லை. ஆனால், நான் சொல்வது அவருக்குப் புரியும். அவர் கொஞ்சம் மாற்றிச் சொன்னார். ஆனால், அந்த அம்மா சொன்னார்கள் என்று சொன்னார். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். 142 அடிக்கு நீரை உயர்த்த வேண்டுமென்று சொன்னவுடனே, கேரளா என்ன செய்தது? இதைத் தடுப்பதற்கு Kerala Irrigation and Water Conservation (Amendment) Act என்று ஒன்றை அவர்கள் கொண்டு வந்தார்கள். அப்போது நீங்கள்தான் ஆட்சியில் இருந்தீர்கள். Judgement 27-2-2006 அன்று சொல்லப்பட்டது. ஆனால், கேரள அரசு 15-3-2006 அன்று சட்டத்தில் Amendment கொண்டு வந்தது. அதற்கு 13 நாட்கள் கழித்துத்தான், திரும்பவும் பெட்டிஷன் போடுவதற்கு நீங்கள் சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்றீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இங்கே கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானம் விவாதமின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பெற வேண்டுமென்றுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசியதற்கெல்லாம் நாங்கள் அமைதியாக இருந்தோம். ஆனால், உண்மைக்கு மாறான பல விஷயங்களை அவர் இங்கே அடுக்கிக் கொண்டேயிருக்கிறார். அவர் பேசி முடித்ததற்குப் பின்னால் நான் பதில் சொல்லலாம் என்று இருந்தேன். ஆனால், இடையில் குறுக்கிட்டு விளக்கம் அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

2006 பிப்ரவரி 27 ஆம் தேதி, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில், அணை பலமாக இருக்கிறது; பூகம்பமே ஏற்பட்டாலும், அணை உடையாது என்ற தீர்ப்பினை 5 ஆண்டுக் காலம் சட்டப் போராட்டம் நடத்தி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் பெற்றுத் தந்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது வரலாறு.

2014 டிசம்பர் 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஏனென்று சொன்னால், நாங்களெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு, அவர் வழங்கிய அறிவுரைகளைக் கேட்டிருக்கிறோம். டெல்லியிலிருந்து வழக்கறிஞர் குழுக்களையெல்லாம் அழைத்து, தலைமைச் செயலகத்தில் அமரச் செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் சட்ட நுணுக்கங்களையெல்லாம் அவர்களுக்குத் தெரிவித்து, அந்த அடிப்படையில் உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கறிஞர்கள் வாதாடிப் பெற்ற தீர்ப்புதான், 2006 பிப்ரவரி 27-ல் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு. (மேசையைத் தட்டும் ஒலி)

எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும், இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று வருகின்றபோது, முதலில் மத்திய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும். மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டுமென்றால், மத்திய அரசினுடைய கவனத்திற்கு அது எடுத்துச் செல்லப்படவேண்டும். மத்திய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லாமல், நேரடியாக நாம் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வோமேயானால், முதலில் அவர்கள், 'மத்திய அரசுக்கு இதை எடுத்துச் செல்லுங்கள்; அவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள்' என்று அறிந்துகொள்ள, அதைத் திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் 27-2-2006-ல் பெற்ற தீர்ப்பினை பாரதப் பிரதமருக்கு கடிதம்வாயிலாகத் தெரிவித்தார்கள். ஆனால் அன்றைய மத்திய அரசு செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்தது. தமிழகத்தில் உங்களுடைய ஆட்சி நடந்துகொண்டிருந்தது. டெல்லி பட்டணத்தில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சியில் நீங்கள் ஆண்டுகொண்டிருந்தீர்கள். அங்கிருந்து சாதகமான பதில்கூட வரவில்லை. பதிலே வரவில்லை. கேரள அரசுக்கு ஏற்கெனவே 2003 ஆம் ஆண்டில் 'கேரள பாசன நீர் பாதுகாப்புச் சட்டம்' என்ற ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் 2003 ஆம் ஆண்டில் கேரள அரசால் இயற்றப்பட்ட சட்டம். அந்தச் சட்டத்திற்கு 19-3-2006-ல் ஒரு திருத்தச் சட்டம் (amendment) கொண்டுவந்தார்கள். அந்தத் திருத்தச் சட்டத்தில் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடியாகத்தான் இருக்கும் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 டிசம்பர் 4

பிற்பகல் 3-25

அதற்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதினார்கள். அதற்கு பதில் இல்லை. 31-3-2006 அன்று கேரள சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அந்தத் திருத்தச் சட்டம் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது, அந்தச் சட்டத்தை இரத்து செய்யவேண்டும் என்று உடனடியாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் வரலாறு.

அதற்குப் பின்னர் தமிழகத்தில் நடந்த சம்பவங்களெல்லாம் உங்களுக்குத் தெரியும். தமிழக சட்டமன்றத்திற்குத் தேர்தல் வந்தது. எதிர்பாராதவிதமாக திராவிட முன்னேற்றக் கழகம் மைனாரிட்டி அரசாங்கமாக இந்த சட்டமன்றத்தில் அமர வேண்டிய துர்ப்பாக்கியமான சூழ்நிலை தமிழகத்திற்கு ஏற்பட்டது. 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டுவரை தி.மு.க. ஆட்சி இருந்தது. நான் ஒரே ஒரு கேள்வியை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களிடம் கேட்கின்றேன். இந்த வழக்கு 2006-லிருந்து 2011 வரை நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது முல்லைப் பெரியாறு பிரச்சினையில், வழக்குகளில், அது சம்பந்தப்பட்ட விவரங்களில் நீங்கள் முழு மனதுடன் ஈடுபட்டிருந்தால், கேரள அரசு புதிய அணை கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வலுவாகச் சொல்லிக் கொண்டு, டெல்லி பட்டணத்தில் அவர்கள் செல்வாக்கைப் பெறுகின்றவகையில் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தினுடைய புதிய அணை கட்டுவதற்கான ஆய்விற்கு ஒப்புதல் கொடுத்தாகிவிட்டது என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிக்கையின்வாயிலாக உங்களிடம் சொல்லி, உங்கள் செல்வாக்கை அங்கு பயன்படுத்தி, அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று சொன்னார்கள். உடனே உங்களுடைய தலைவர், அது மாதிரியான அனுமதி கொடுக்கவில்லை என்று மறுத்தார்கள். நீங்கள் இங்கேயும் ஆளுகின்றீர்கள், டெல்லியிலும் ஆளுகின்றீர்கள். டெல்லியிலே ஆளுகின்ற அரசில் திரு. ஜெய்ராம் ரமேஷ், அப்போது சுற்றுச்சூழல் அமைச்சராக இருந்தார். அவர் அனுமதி கொடுத்த விவரம்கூட உங்களுக்குத் தெரியவில்லை, மறுத்தீர்கள். கடைசியில் அவரே

2014 டிசம்பர் 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஒத்துக்கொண்டார். உடனே நீங்கள் என்ன சொன்னீர்கள்? திரு. ஜெய்ராம் ரமேஷை எதிர்த்து நாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்தப் போகிறோம் என்று சொன்னீர்கள். ஆர்ப்பாட்டம் நடத்தவில்லை. உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம் என்று சொன்னீர்கள். அதுவும் செய்யவில்லை. கண்டனப் பொதுக்கூட்டம் நடத்துவோம் என்று சொன்னீர்கள். அதையும் செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், திரு. ஜெய்ராம் ரமேஷை எதிர்த்து தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திய ஒரே தலைவர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அப்பொழுதிலிருந்து இந்த இரு மாநிலம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் நீங்கள் எந்த அளவிற்கு உங்களுடைய பொறுப்புகளைத் தட்டிக் கழித்து, ஏதோ போனால் போகிறது என்று அதில் involvement இல்லாமல், எப்படி ஆட்சி செய்து, தமிழகத்தை ஆண்டீர்கள் என்பதற்கு இதுதான் ஒரு மிகச் சிறந்த உதாரணம் என்பதை இந்த மன்றத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதையெல்லாம் நான் இந்தப் பதிலில் சொல்லாததற்குக் காரணம், இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படவேண்டும் என்ற ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான். இன்னும் ஏகப்பட்ட பிரச்சினைகள் இந்த வழக்குகளில் இருக்கின்றன. நீங்கள் ஆட்சியில் இருந்தபோது எந்த அளவுக்கு மெத்தனமாக இருந்திருக்கிறீர்கள். டெல்லியில் ஆளுகின்ற பொறுப்பில் இருந்தபோதும், தமிழகத்தில் ஆளுகின்ற பொறுப்பில் இருந்தபோதும் இந்தப் பிரச்சினைக்கு உங்களால் ஒரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த முடியவில்லை. அதை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் செய்தார்கள் என்ற வரலாறு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக தமிழகத்தின் உரிமைகளை, ஜீவாதார உரிமைகளைப் பெற்றுத் தருகின்ற ஒரே முதலமைச்சர், ஒரே மக்கள் தலைவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது இன்றைக்கு நிரூபணமாகியிருக்கின்றது. அதுதான் வரலாறு. இந்த வரலாற்றுக்குள் நீங்கள் எல்லாம் உள்ளே குறுக்குசால் ஓட்ட முடியாது என்பதை மட்டும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 டிசம்பர் 4

பிற்பகல் 3-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரே ஒரு கேள்வியை கேட்கிறேன். நீங்கள் கேரளாவின் amended act-ஐ எதிர்த்து Supreme Court போய் சிவில் பெட்டிஷன் போட்டீர்கள். அந்த பெட்டிஷனுக்கு நம்பர் எதுவும் வாங்கினீர்களா? கோர்ட்டில் கேஸ் போட்டால் நம்பர் வாங்கவேண்டாமா? அவ்வளவு அலட்சியமாக இருந்துவிட்டு போகிற கட்சி அ.தி.மு.க. நான் இன்னொன்றையும் கேட்கிறேன். 136 அடி வந்தது யாராலே? அதற்கு யார் காரணம். அதி.மு.கதான் காரணம். 152 அடி இருந்ததை, யாரையுமே கேட்காமல், அமைச்சரைக் கேட்காமல், அமைச்சரவையைக் கூட்டாமல், சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டாமல் இரண்டு அதிகாரிகள் போய் கேரளத்தில் ஒத்துக்கொண்டு வந்தார்களே, அது யார்? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் நீண்டுகொண்டே போகக்கூடாது என்று நினைக்கின்றேன். ஏற்கெனவே, நீங்கள் காவேரி பிரச்சினையில் ஒரு வரலாற்று பிழையையும் இங்கே செய்திருக்கிறீர்கள். 2007-ல், (குறுக்கீடு) என்னை உட்கார் என்று நீங்கள் சொல்ல முடியாது. என்ன பேசுகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) இருங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி முடிக்கட்டும். உட்காருங்கள் திரு. துரைமுருகன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: தீர்மானத்தை ஆதரியுங்கள். (குறுக்கீடு)

2014 டிசம்பர் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடு) சரி பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் தேவையில்லாமல் குறுக்கிடக்கூடாது, அவ்வாறு குறுக்கிட்டால் அவர்களை வெளியேற்றலாம் என்று அவர்களே ஒரு சட்டத்தை இங்கே கொண்டு வந்து, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இங்கே இருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கலைராஜனையும், அன்றைக்கிருந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அரியையும் அவர்கள் வெளியேற்றியிருக்கிறார்கள். நீங்கள் பேசுவதை பொறுமையாகக் கேட்டுக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். திரும்ப அவர் பேசும்போது, தேவையில்லாமல் நீங்கள் குறுக்கீடு செய்யக்கூடாது. அவர் பேசிய பிறகுதான் நீங்கள் சொல்லவேண்டும். உங்களுக்கு நல்ல எண்ணம் இருந்தால் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு கொடுங்கள். தேவையில்லாமல் தமிழக மக்களுக்கு துரோகம் இழைக்கின்ற வகையில் இந்தப் பிரச்சினையை அரசியலாக்கப் பார்க்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

திரு. துரைமுருகன்: கடைசி நேரத்தில் திரு. ஆனந்தன் தலைமையில் கமிட்டி அமைத்து கடைசியில் மீண்டும் 142 அடியை வாங்கிக் கொடுத்தவர் எங்கள் தலைவர்தான். எனவே, நான் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் நன்றி தெரிவித்துத் தீர்மானம் போடவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கலைஞருடைய பெயரையும் சேர்க்கவேண்டும். உங்கள் முதலமைச்சர் பெயரைச் சேர்த்துக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் இது நன்றி தெரிவிக்கிற தீர்மானம் என்று, உங்களுடைய தலைவியைப் புகழ்கிற ஒரு புகழாரமாக இருக்கிற காரணத்தினால், இந்தத் தீர்மானத்தை நான்

[திரு. துரைமுருகன்] [2014 டிசம்பர் 4

எதிர்க்க வேண்டியவனாக இருக்கிறேன் என்று சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய தீர்மானத்தைத் திருத்திப் படிப்பார்களா என நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்கள் கருத்தை சொல்லிவிட்டீர்கள். நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. துரைமுருகன், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கூற்று, பரீட்சையில் பெயிலாகி விட்டு, எனக்கு மார்க் போட்டு பாஸ் பண்ண வையுங்கள் என்று சொன்னால், யாராவது ஒத்துக்கொள்வார்களா? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள்தான் சொல்லிவிட்டீர்களே? இல்லை. நீங்கள்தான் முடித்துவிட்டேன் என்று சொல்லிவிட்டீர்களே? திரும்ப ஏன் எழுந்திருக்கிறீர்கள்? (குறுக்கீடு) திரு. துரைமுருகன், முடிக்கிறேன் என்று சொல்லிவிட்டு, திரும்ப எதற்குப் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) நீங்கள்தான் உங்கள் உரையை முடித்துவிட்டீர்களே? சரி முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. அதாவது 142 அடியை சொல்வதுபோல் ** எங்கள் எதிர்ப்பை தெரிவித்து வெளிநடப்பு செய்கின்றோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசியாக திரு. துரைமுருகன் சொன்ன வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இந்தத் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றுகின்ற வேளையில் இப்படிப் பேசுவது சரியல்ல. திரு. துரைமுருகன் சொன்ன வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 டிசம்பர் 4]

பிற்பகல் 3-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்குப் பெரிதும் பயனுள்ள, தமிழக மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்ற வகையிலே மக்களின் முதல்வராக இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த இந்தச் சாதனையை ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் ஓட்டுமொத்தமாக இந்தத் தீர்மானத்தையே எதிர்ப்பது திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக மக்களுக்குச் செய்கின்ற துரோகம் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தென் மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்ற வகையிலே 142 அடியாக முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த வேண்டுமென்று தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்றத்திற்கும், அதுமட்டுமல்லாமல், இந்தப் பிரச்சினையை முதன்முதலாக உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்ற விவசாயச் சங்கத்திற்கும், அரசியல் சாராத இயக்கங்களுக்கும், இந்த முல்லைப் பெரியாறு பிரச்சினையில் நீண்ட நெடுங்காலமாக போராடி வருகின்ற அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், 142 அடி உயரத்திற்கு தண்ணீரைத் தேக்கியதற்காக தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பிலே நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல், 152 அடி உயரத்திற்கு நீர்மட்டத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காக தொடர்ந்து தமிழக அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்குத் தமிழக மக்கள் மட்டுமல்லாமல் தேசிய முற்போக்கு திராவிடக் கழகமும் துணை நிற்கும் என்று தெரிவித்துக்கொண்டு, முல்லைப் பெரியாறு அணைப்

[திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்] [2014 டிசம்பர் 4 பிரச்சினைக்காகச் செல்லுகின்ற நம்முடைய தமிழக அதிகாரிகளை கேரள அதிகாரிகள் மிரட்டுகின்ற பாணியிலே, செய்கின்ற செயல்கள் எல்லாம் இந்திய ஒருமைப்பாட்டின் ஒற்றுமையைக் குலைப்பதாக இருக்கின்றது. அதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உடனடியாக இதுபோன்ற செயல்களைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற எங்களுடைய தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தினுடைய கோரிக்கையையும் இந்த நேரத்திலே தெரிவித்து, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தியதற்கு நன்றி தெரிவித்து, அமருகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அம்மா அவர்களின் அயராத போராட்டத்தினால், முழு அளவை எட்டியது முல்லைப் பெரியாறு!

சதி செய்து தடுத்ததை மதிகொண்டு மீட்டதாலே, ஏரோட்டும் பூமியின் நீரோட்டம் பெருகுது!

அறப்போர் நடத்தி அணையைக் காத்த தாயாலே, அன்னைத் தமிழ் பூமியின் நீர்வளமோ அமோகம் ஆகுது!

கண்கொள்ளாக் காட்சியாகி, 142 அடி தண்ணீர் கடலாகப் பெருகுது!

கலப்பை நம்பி உழைப்போரின் களைப்பு நீங்குது! கவலை விலகுது! இனி முப்போகம் விளையுமே மூவேந்தர் நாடு!

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின்"

எனும் வள்ளுவத்தை, தண்ணீரில் மெய்ப்பித்த தாயுருவப் போராளியாம், கர்னல் பென்னிகுயிக் கனவும் கைகூடி மலருது!

மண்ணோடு மண்ணாகியதை, தம் முயற்சியால், பொன்னாக்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். வாஞ்சைகொண்ட தாயை, "வாழும் வள்ளலாரே, வருண பகவானே" என, வறண்டுகிடந்த மண்ணும் வாயார வாழ்த்துது!

37 ஆண்டு கால தாவாவுக்கு முடிவு கண்ட விடியலை, கும்பிட்ட கரம் ஏந்தி குலசாமி வாழ்கவென, கும்மியடித்து மகிழுது! குலமகளாய்ப் போற்றுது! பாச மழை பொழியுது!

2014 டிசம்பர் 4] [பேரவைத் தலைவர்]

முல்லைப் பெரியாறு நீரின் காட்சியோ சமுத்திரம். மாண்புமிகு அம்மா அவர்களே, நீங்கள்தான் என்றும் சரித்திரம். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்பான இத்தத் தீர்மானத்தை வரவேற்று மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வுகளோடு என்னுடைய உணர்வுகளையும் இணைத்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5-12-2014) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1)த் துறையின் 25-3-2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 30-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவரை நியமித்தது குறித்து வணிகவரி மற்றும் பதிவு (இ2)த் துறையின் 13-6-2014 ஆம் நாளிட்ட அரசாணை (3டி) எண் 16-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின்